# <u>DEPOSITION OF WITNESS</u>

## <u>(Chapter XXII Code of Criminal Procedure)</u>

<u>கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.24 |
| பெயர் | எம்.செல்வி | தாலூக்கா | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 17th day of June 2025.

(06-06-2025 ஆம் தேதி அன்று CMP.No.4/2025 மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்படுகிறது)

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் கோவை மாவட்டம் (வடக்கு) பதிவாளர் அலுவலகத்தில் தணிக்கை பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். பீளமேடு சார்பதிவாளர் பணியிடம் காலியாக இருப்பதால் கூடுதலாக பீளமேடு சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பொறுப்பில் இருக்கிறேன். 12-08-2009 தேதியிட்ட பொது அதிகார ஆவணமானது ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம். அதன் பதிவு எண்.421/2009 ஆகும். மேலே குறிப்பிட்ட பொது அதிகார ஆவணமானது நீலியப்பன் மகன் ராஜு என்பவர் வேணுகோபால் மகன் வெங்கிடசுப்பிரமணியத்திற்கு கொடுத்ததாகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மேலே குறிப்பிட்ட பொது அதிகார ஆவணத்தில் எனது அலுவலகத்தைச் சேர்ந்த கே.பி.தேன்மொழி, உதவியாளர் அவர்கள் சான்றொப்பம் செய்துள்ளார். அதன் சான்றிட்ட நகல் அ.த.சா.ஆ.22 ஆக

குறியீடு செய்யப்படுகிறது. இந்த பொது அதிகாரத்தில் சொத்து விவரமானது கோயமுத்தூர் மாவட்டம், ராமநாதபுரம் கிராமம், க.ச.எண்.144/3 பி மற்றும் க.ச.எண்.145/2 டி -ல் உள்ள 98 செண்ட் பூமியை மேல்புறமாக உள்ள 49 செண்ட் பூமிக்காக பவர் கொடுக்கப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.22 ல் நான்காவது பக்கத்தில் முதல் சாட்சியாக இருப்பது ராஜூ, த/பெ ராமசாமி, விலாசம் 198 – B- 10 பச்சைபட்டி மெயின் ரோடு, சேலம் - 636 003 ஆகும். அதே ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் முதலாவதாக ராஜூ (ஆங்கிலத்தில் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது), த/பெ ராமசாமி, 122, மேட்டுமாரியம்மன் கோவில் தெரு, சேலம் - 1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரண்டு இடத்திலும் ராஜூவின் கையொப்பம் ஒன்றாக உள்ளது. 12-08-2009 ஆம் தேதி ஒரு கிரைய உடன்படிக்கை ஆவணம் பீளமேடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு எண்.2857/2009 ஆகும். அந்த கிரைய ஒப்பந்தமானது நீலியப்பன் மகன் ராஜூ சார்பாக மேலே குறிப்பிட்ட பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் வேணுகோபால் குமாரர் வெங்கிடசுப்பிரமணியம் அவர்களுக்கும், சேலம் - 636 003, பச்சப்பட்டி மெயின் ரோடு, கதவு எண்.198-B-10 வீட்டில் வசித்து வரும் ராமசாமி மகன் ராஜூ ஆகிய இருவருக்குமிடையே ஏற்பட்டதாகும். மேலே குறிப்பிட்ட ராமசாமி மகன் ராஜூதான் அ.த.சா.ஆ.22 பொது அதிகார ஆவணத்தில் சாட்சியாகவும், இன்னார் என்று நிரூபித்தவராகவும் கையொப்பம் செய்துள்ளார். 12-08-2009 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் சான்றிட்ட நகல் அ.த.சா.ஆ.23 ஆகும். அந்த காலகட்டத்தில் மேலே சொன்ன இடத்திற்கு சதுரடி 60 ரூபாயாக அரசு வழிகாட்டி மதிப்பு இருந்தது. சதுரடி 60

ரூபாய் இருக்கும்பட்சத்தில் ஒப்பந்தம் போடப்பட்ட 49 செண்ட்டிற்கு மொத்தம் ரூ.12,80,664/- ஆகும். ஆனால் அ.த.சா.ஆ.23 உடன்படிக்கையில் கிரைய தொகையாக ரூ.5,00,000/- என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அ.த.சா.ஆ.23 லும் பீளமேடு சார்பதிவாளர் அலுவலகத்தைச் சேர்ந்த தேன்மொழி, உதவியாளர் சான்றொப்பம் செய்துள்ளார்.

30-10-2009 ல் ஒரு பொது அதிகாரப்பத்திரம் பீளமேடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு எண்.574/2009 ஆகும். அந்த ஆவணமானது நீலியப்பன் மகன் ராஜுவால், வேணுகோபால் மகன் வெங்கிடசுப்பிரமணியத்திற்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணமாகும். அ.த.சா.ஆ.22 ம், தற்போது நான் குறிப்பிட்ட 30-10-2009 பொது அதிகாரப்பத்திரமும் ஒரே நபரால் ஏற்படுத்தப்பட்டதாக 30-10-2009 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.22 ல் ஒட்டப்பட்டுள்ள புகைப்படமும், 30-10-2009 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தில் ஒட்டப்பட்ட புகைப்படமும் வெவ்வேறாகும். அ.த.சா.ஆ.22 ல் இருக்கும் ராஜுவின் கையெழுத்திற்கும் 30-10-2009 ஆவணத்தில் இருக்கும் ராஜுவின் கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது. 30-10-2009 தேதியிட்ட பொது அதிகார ஆவணமானது அ.த.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆவணத்தை நான்தான் சான்றொப்பம் செய்துள்ளேன். அ.த.சா.ஆ.24 ல் இரண்டாவதாக சாட்சி கையொப்பம் செய்தவர்தான் இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்திலும் இரண்டாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளார். ஆனால் இரண்டு இடத்திலும் அவரது முகவரிகள் வெவ்வேறாக உள்ளது. கையொப்பங்கள் மட்டும் ஒன்றாக உள்ளது. அ.த.சா.ஆ.24 ல் கோயமுத்தூர், சவுரிபாளையம்

கிராமம், க.ச.257, ராம் லட்சுமண் நகரில் உள்ள சைட் நெ.45 ல் 2200 சதுரடி, சைட் நெம்பர் 46 ல் 2200 சதுரடி, சைட் நெம்பர் 47 ல் 2200 சதுரடி, மூன்று சைட்டுகளும் சேர்த்து 6600 சதுரடிக்கு பொது அதிகாரம் போடப்பட்டுள்ளது. 30-10-2009 ல் கிரைய ஒப்பந்தம் ஒன்று பீளமேடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. அதன் பதிவு எண்.3122/2009 ஆகும். அந்த ஒப்பந்தமானது நீலியப்பன் மகன் ராஜு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் பொது அதிகாரத்தின் அடிப்படையில் வேணுகோபால் மகன் வெங்கிடசுப்பிரமணியம் அவர்களுக்கும், தங்கவேல் மகன் டி.மணி அவர்களுக்கும் ஏற்பட்டதாக காணப்படுகிறது. 30-10-2009 தேதியிட்ட காலிமனை ஜாகா கிரைய ஒப்பந்தமானது அ.த.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆவணத்தை நான்தான் சான்றொப்பம் செய்துள்ளேன். இந்த கிரைய ஒப்பந்தமானது அ.த.சா.ஆ.24 ல் இரண்டாவதாக சாட்சியாகவும், இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் இரண்டாவதாக கையொப்பம் செய்த நபருக்காகவும் ஏற்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட விற்கிரையத்தொகை ரூ.6 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அ.த.சா.ஆ.25 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்திற்கு அன்றையதேதியில் சதுரடிக்கு ரூ.507/- ஆக அரசு வழிகாட்டி மதிப்பு இருந்தது. அ.த.சா.ஆ.25 ஆவணமானது மொத்தம் 6600 சதுரடிக்கு போடப்பட்டுள்ளது. 6600 சதுரடிக்கு சதுரடி 507/- வீதமாக மொத்தம் ரூ.33,46,200/- ஆகும். ஆனால் அ.த.சா.ஆ.25 ல் ரூ.6 லட்சமாக தொகை போடப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.22 மற்றும் அ.த.சா.ஆ.24 ல் நீலியப்பன் மகன் ராஜுவின் கையொப்பம் வெவ்வேறாக காணப்படுகிறது,

புகைப்படமும் வெவ்வேறாக காணப்படுகிறது. அ.த.சா.ஆ.24 ஆவணமானது வேறு, வேறு நபர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.22 மற்றும் அ.த.சா.ஆ.24 இரண்டு பொது அதிகார ஆவணமும் ஒரே நபருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது. அ.த.சா.ஆ.24 ன் அடிப்படையில்தான் அ.த.சா.ஆ.25 ஏற்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட அ.த.சா.ஆ.23 மற்றும் 25 ல் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களுக்கு அரசு வழிகாட்டி மதிப்பை காட்டுவதற்குண்டான இரண்டு பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் அ.த.சா.ஆ.26 மற்றும் 27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது முதல் சாட்சியத்தில் குறியீடு செய்த அ.த.சா.ஆ.**22** முதல் **26** வரையுள்ள ஆவணங்களைப் பற்றி எனக்கு நேரடியாகத்தெரியாது. ஒரு ஆவணத்தை பதிவு செய்யவேண்டுமென்றால் சரிபார்த்துதான் செய்வோம் என்றால் சரிதான். ஆவணத்தின் தன்மையைப் பொறுத்து பத்திரப்பதிவு செய்யப்படும் என்று சொன்னால் சரிதான். ஆவணத்தில் கையொப்பம் செய்பவர்கள் எங்கள் முன்னிலையில்தான் கையொப்பம் செய்யவேண்டும் என்று சொன்னால், ஆவணத்தில் முன்னமே கையொப்பம் செய்து விட்டு பின்னர் எங்கள் முன்னிலையிலும் ஆஜராவார்கள். ஆவணத்தை சட்டத்திற்கு உட்பட்டுதான் பதிவு செய்வோம்.

மறு விசாரணை

பதிவு ஆவணங்களில் சாட்சிகள் பதிவாளர் முன்னிலையில் கையொப்பம் செய்யமாட்டார்கள். இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில்

கையொப்பம் செய்பவர்கள் மட்டும் பதிவாளர் முன்னிலையில் கையொப்பம் செய்வார்கள்.

குறுக்கு விசாரணை அனுமதியுடன்

சாட்சிகள் பதிவாளர் முன்னிலையில் ஆஜராகவில்லை என்றாலும் அவர்களுக்குரிய ஆவணங்களை பரிசீலனை செய்வோம்.

ஒம்/எம்.செல்வி,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.